FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| தரம் :- 12 (2019) | நாடகமும் அரங்கியலும் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 3 | 21) 1 | 31) 5 |
| 2) 4 | 12) 4 | 22) 4 | 32) 2 |
| 3) 1 | 13) 3 | 23) 2 | 33) 1 |
| 4) 3 | 14) 1 | 24) 3 | 34) 2 |
| 5) 2 | 15) 4 | 25) 4 | 35) 5 |
| 6) 1 | 16) 1 | 26) 1 | 36) 2 |
| 7) 3 | 17) 3 | 27) 3 | 37) 3 |
| 8) 5 | 18) 5 | 28) 4 | 38) 2 |
| 9) 2 | 19) 2 | 29) 3 | 39) 5 |
| 10) 3 | 20) 3 | 30) 4 | 40) 3 |

agaram.lk

### பகுதி - II
### பகுதி - A

*01.* I. ‘கலை மனிதத்திறனின் வெளிப்பாடு’ என்ற பொருள்பட ‘ஹொனிக்மன்’ அல்லது யாராவது ஒரு கோட்பாட்டாளரின் சிந்தனையை முன்வைத்து விளக்கி இருத்தல்.

II. ‘கலை மனித உணர்வுகளின் வெளிப்பாடு” – R.G. ஹொலிவூட்

- “தூய உள்ளுணர்வின் வெளிப்பாடே கலை” – குரேசே....
- “அழகை கண்டு பிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவதும் கலை” - அரவிந்தர்

இவ்வாறு யாராவது 2 சிந்தனையாளரின் கலைபற்றிய எண்ணக்கரு எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

III. மேலைத்தேய, கீழைத்தேய கோட்பாட்டாளரின் கருத்துக்களில் தென்படும்.

- மனித உணர்வுகளுடன் தொடர்புபடல்
- அனுபவத்தில் முகிழ்த்தல்
- தொடர்பாடல் வன்மை
- அழகியல் இன்பம் தருவது......... போன்ற ஒற்றுமைகளை விபரித்திருப்பதுடன், கீழைத்தேய சிந்தனை பெரும்பாலும் இறைஞானத்துடன் தொடர்புபடுவதையும், மேலைத்தேய சிந்தனை யதார்த்த பூர்வமாக அமைவதனையும் விபரித்திருத்தல்.

02. I) நாடகம் - நிகழ்த்தும் பொருள் / நிகழ்த்தும் கலை வாழ்வனுபவத்தை வெளிப்படுத்துவது. மனித முரணை அடிப்படையாக கொண்டு உரையாடல் செயல்களின் மூலம் விளக்கப்படுவது.

அரங்கு - நிகழ்த்துகையுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களினதும் தொகுதி

ஆற்றுகை - ஒருவர் ஒருசிலர் முன்பாக செய்து காட்டுவது தனி / கூட்டாக.

மேற்படி அடிப்படையான விளக்கங்கள், உதாரணங்களுடன் இடம்பெற வேண்டும்.

II. - வானொலி நாடகம்

- கேட்டதுடன் மட்டும் தொடர்புடையது மேடை நாடகம் பார்த்தலுடனும், கேட்டலுடனும் தொடர்புடையது.
- வானொலி நாடகத்திற்கு உடனடி எதிர் வினைகள் இல்லை, பதிவு செய்து சேமிக்க கூடியது. ஆனால் மேடை நாடகம் உடன் நிகழும்..........

- தொலைக்காட்சி நாடகம்
  - இங்கு கமரா முக்கியம் பெறும், அதில் நடிகன் முக்கியம்.
  - தொலைக்காட்சி தொழில்நுட்ப கருவி தேவை - இங்கு மேடை
  - உடனடி எதிர்வினை இல்லை – உடனடி எதிர்வினை காணப்படும்..........

III. நாடகம், நடனம், இசை, வில்லிசை, கதாபிரசங்கம், பலே, ஒப்பேரா............

03. சிறு குறிப்புக்களில்

- ஒவ்வொரு அரங்க மூலகங்களினதும் முக்கியத்துவம்
- அவற்றால் ஆற்றப்படும் பணிகள்
- ஏனைய அரங்க மூலகங்களுடனான, அவற்றின் தொடர்பு
- அதற்கு பொறுப்பு வகிப்பவர்
- நாடகத்தின் கலைத்துவ முழுமையில் அவற்றின் பங்களிப்பு போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

agaram.lk

## பகுதி - B

04. I. ‘ஒரு மனித குழுமமொன்றின் நம்பிக்கைகளின் அடியான, ஜதீகம் சார்ந்த, மீளமீள செய்யப்படும் செயல்களே சடங்குகள்‘ என்ற அடிப்படையிலான விடைகள் அமையப்பெற்றிருத்தல்.

II. குறொட்டோவ்ஸ்கி
பீற்றர் புறாக்
றிச்சாட் செக்னர்
அகஸ்தோ போவால்
அன்ரோனியோ ஆர்த்தோ......

III. - ஆற்றுவோர், பார்ப்போர், வெளி என்ற, ஒன்றிணைவு

- சமூகம் ஒன்றிணைதல்
- சமூக ஒருமைப்பாடு
- சேர்ந்து கருமமாற்றுதல்
- தொடர்பு கொள்ளல்
- தாக்க, மறுதாக்க நிலமைகள்
- எதிர்வினைகளால் வளர்த்து செல்லப்படல்
- ஜதீகம், நம்பிக்கை, மீள நிகழ்த்துகை.

போன்றதான நாடகமும் சடங்கும் தொடர்படுகின்ற விடயங்களை உதாரணங்களுடன் விபரித்திருத்தல்.

05. I. இடிப்பஸ் ஜொகஸ்ரா, கிறையோன்
தெய்ரீரியஸ், செய்தியாளன், ஒரு இடையன்.........

II. 'விதியின் பிடியில் இருந்து எவருமே தப்ப முடியாது'
மனிதன் கடவுளோடு கொண்டுள்ள உறவு பற்றியும் மனிதன் தனது விதியை கட்டுப்படுத்த முயற்சிப்பது பற்றியதான கருப்பொருளை கொண்டது.

III. - அரிஸ்ரோட்டலிய அரங்க மரபினை தொடர்புபடுத்தி எழுதுதல்.

- கிரேக்கத்தின் பொது நம்பிக்கையான விதி, சாபம் என்பவற்றை அடிப்படையாக கொண்ட தொன்மக்கதை.
- 'நலமார்ந்த ஒன்று பாழ்பட்டும் போதல்' என்பதற்கனமைய இடிப்பஸ்ஸின் வீழ்ச்சி.
- கால, இட இயக்க ஒருமை.
- அவலத்தவறு (ஹமாசியா) நாயகனின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைதல்.
- பாயிரம், வருகை, காட்சிகள், இசைப்பா முகாரி...... என்ற ஒழுங்கினை கொண்டிருத்தல்.
- செய்தியாளன் மூலமாக மரணம் கூறப்படுதல்.
- அவல முடிவு / மீள அவலம் கூறப்படுதல் ...............

06. I. ரஜடியின் வளர்ச்சி

- தெஸ்பிஸ் - ஒரு நடிகனை அறிமுகம் செய்தார்.
- ஈஸ்கலஸ் - இரண்டாவது நடிகன், நாடக அமைப்பு அவல வளர்ச்சி, முக்கூட்டு வடிவம்..........
- சோபோகிளிஸ் - மூன்றாவது நடிகன், சிக்கலான கதை சூழ்வு தனிமனித பிரச்சனை, அவலத்தை உச்சத்திற்கு கொண்டு செல்லல்.
- யூரிப்பிடிஸ் - யதார்த்தத்தை நோக்கி வந்தமை, அவலத்தை குறைத்தமை, தனிமனித உளவியல், பல நடிகர்கள் அறிமுகம், கோரஸ் முக்கியத்துவம் அற்றதாகியமை.

II. வீரயுகக்காலம் - சடங்குகள், விழாக்கள், நாடோடிக்கலைஞர்கள் ...............

நிலபிரபுத்துவகாலம் - ஆடல் குலமரபு உருவாகியமை, பிரபுக்களின் மகிழ்வளிப்பு பொழுதுபோக்கு கலையாக அரங்கு.

வணிகயுகக்காலம் - செந்நெறி அரங்கு உருவாக்கம்.
- மாதவியின் அரங்கு
- அரசர், வணிகர் ஈடுபாடு

கேவில்பண்பாட்டுகாலம் - மதப்பிரச்சாரங்கள் கோவில் அரங்கு, பக்தியரங்கு, தேவதாசியர் உருவாக்கம்.

நாயக்க மன்னர் காலம் - அடிநிலை மக்கள் கலை எழுச்சி
- பள்ளுகுறவஞ்சி, நொண்டி

ஐரோப்பியர் காலம் - ஐரோப்பிய அரங்கின் வருகை, தொழில் முறை அரங்கு

என சுருக்கமாக விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

III. - ஈழத்தமிழர்களின் தனித்துவமான கலை மரபு கூத்து
- கூத்துக்கு நீண்ட தொடர்ச்சி உண்டு
- சிவபெருமானை 'கூத்தனாக' காண்பது.
- சங்ககாலத்தில் இருந்து தொடர்ச்சி
- சடங்கு, நம்பிக்கைகளுடன் ஆடப்படுதல்.
- பல்வேறு சுதேச வடிவங்கள் (வடிமோடி, தென்மோடி)
- ஆடல், பாடல் முறைமை
- பயில்வில் காணப்படும் பண்பாட்டு, சமூகவியல் தொடர்பு.
- மொழிசார் தொடர்பு

என நோக்கப்படலாம்.

agaram.lk